# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 29/2016** **நாள் : 26/12/2016**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்
கோட்டச் செயலாளர்கள்

அன்பான தோழரே,
வணக்கம்,

நமது 15வது மாநில மாநாட்டின் முடிவுகளுக்கு ஏற்பவும் சேலத்தில் (ஏற்காடு) நடந்த செயற்குழு முடிவின்படி 2016 டிசம்பர் 22 மின்வாரிய தலைமையகம் முன்பு கூட்டு முறையீடு காத்திருக்கும் போராட்டம் நடத்துவது என முடிவு எடுக்கப்பட்டது. இந்த முடிவை அமல்படுத்த முயற்சி எடுத்த மாநில நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், கோட்டப்பொறுப்பாளர்கள் என அத்தனை தோழர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை மாநில மையத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறோம்.

போராட்ட தேதி ஏற்கனவே இருமுறை தள்ளி வைத்த நிலையில் நமது போராட்டத்தின் கோரிக்கைகளின் தன்மையை உணர்ந்த நமது தோழர்கள் டிசம்பர் 22-ல் நடத்துவது என முடிவு செய்தோம். மாநில மையத்திலிருந்து போஸ்டர்கள் முன் கூட்டியே கிளைகளுக்கு அனுப்பப்பட்டன. மண்டலக்குழுக்கள் நடத்தப்பட்டன. திருச்சி, மதுரை, கோவை,சென்னை/வடக்கு, சென்னை/ தெற்கு ஆகிய மண்டலக்குழு கூட்டத்தில் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர் ஆகியோர்கள் கலந்து கொண்டனர். கிளைகள் நிர்வாகிகள் கூட்டத்தை நடத்தி தயாரிப்பு பணிகளில் ஈடுபட்டு நமது போராட்டத்தை வெற்றிகரமாக்க நடவடிக்கை எடுத்து வருவதாக தகவல் கிடைத்த பொழுது மாநில மையம் உற்சாகமடைந்து, மாநில மைய பணிகளை தீவிரப்படுத்தினோம். வாரியத்தின் கவனத்திற்கு நமது போஸ்டர்களும், நோட்டீஸ்களும்போனது.

இந்த சூழ்நிலையில் ‘‘வார்தா புயல்’’ கடந்த 12.12.2016 அன்று சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூார், திருவண்ணாமலை போன்ற பகுதிகளை தாக்கியது. உயரழுத்த மின் கம்பங்கள், தாழ்வழுத்த மின் கம்பங்கள், மின் மாற்றிகள் மற்றும் பில்லர் பாக்ஸ் என பலத்த சேதத்தை மின்வாரியம் சந்தித்தது. நாம் வாரிய அதிகாரிகளை சந்தித்து சேதத்தின் எண்ணிக்கையையும் மனித சக்தி அதிகமாக பயன்படுத்த வேண்டிய அவசியத்தையும் நமது ஒப்பந்த ஊழியர்களை பயன்படுத்த வேண்டிய அவசியத்தை கூறினோம். அதன்பின் தமிழகம் முழுவதும் ஒப்பந்த ஊழியரை இந்த பணிகளில் ஈடுபடுத்த உத்திரவு பிறப்பித்தனர்.

நம்முடைய தோழர்களின் கடுமையான உழைப்பின் காரணமாக வார்தா புயல் பாதிப்பால் ஏற்பட்ட நிவாரண பணிகள்21.12.2016 வரை ஏறத்தாழ 90 சதவீதம் பூர்த்தியடைந்தன. இந்த

காலத்தில் தான் நமது மாநிலத்தலைவர்கள் தோழர்கள் எஸ்.எஸ்.சுப்பிரமணியன், எஸ். இராஜேந்திரன், கே.அருள்செல்வன், டி.ஜெய்சங்கர், கே.ரவிக்குமார்,ஏ.பழனி,எம்.தனலட்சுமி ஆகிய தோழர்கள் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் பணிபுரிந்து வரும் நமது தோழர்களை சந்தித்து, உணவு இருப்பிடம் இதரவசதிகளை அவர்களிடம் கேட்டு நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுத்தோம். அதே நேரத்தில்22.12.2016 இயக்கத்தை பற்றியும் விரிவாக எடுத்துரைத்து அவர்களை பங்கேற்க உத்திரவாதப்படுத்தினோம்.

நமது மாநில நிர்வாகிகளை 21.12.2016 அன்றே சென்னைக்கு வரச்சொல்லி அந்த அந்த மாவட்டங்களில் வந்த தோழர்களோடு நேரிடையாக தொடர்பு கொண்டு பேச கேட்டுக்கொண்டோம். நமது வேண்டுகோளை ஏற்று கடலூர் தோழர்கள் தோழர் டி.பழனிவேல் தலைமையில் வாகன ஏற்பாடு செய்து அனைத்து இடங்களில் பணியாற்றும் கடலூர் ஊழியர்களையும், திருவண்ணாமலை தோழர்கள் ஆர்.சிவராஜ், கே.காங்கேயன் தலைமையில் திருவண்ணாமலை தோழர்களை சந்தித்தும் கோவை மண்டல தோழர்களை வி.மதுசூதனன்,டி.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கோவை மண்டல தோழர்கள் பணியாற்றும் இடங்களிலும், தோழர்கள் வி.இளங்கோ,ஜோதிமணி ஆகியோர் ஈரோடு மண்டல தோழர்கள் பணியாற்றும் இடங்களிலும் எம்.பன்னீர் செல்வம், திருச்சி மாநகர் அவர்கள், திருச்சி மண்டல தோழர்களையும் தோழர் எஸ்.உமாநாத் சிவகங்கை, மதுரை மண்டல தோழர்களையும் சந்தித்து பேசி, 22.12.2016 இயக்கத்தை வெற்றி பெறச்செய்ய தோழர்களிடம் பேசியது நமது இயக்கத்திற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி.

21.12.2016 அன்று காவல்துறை அனுமதி தர மறுப்பு கூறிய பொழுது, நமது தோழர்கள் டி.ஜெயசங்கர், ஆர்.குருவேல் ஆகியோரோடு காவல்துறை உயர் அதிகாரிகளை சந்தித்து பேசிய பின்பு, காவல்துறை தந்த நெருக்கடி பின்பு தான் வாரிய அதிகாரிகள் பேச்சுவார்த்தைக்கு அழைத்தனர்.

பேச்சுவார்த்தையில் நமது தரப்பில் தோழர்கள் எஸ்.எஸ்.சுப்பிரமணியம், எஸ்.இராஜேந்திரன், எம்.வெங்கடேசன், டி.ஜெய்சங்கர், கே.அருள்செல்வன், எம்.தனலட்சுமி,வி.மதுசூதனன், ஆர்.ரவிக்குமார், டி.கோபாலகிருஷ்ணன், எம்.தயாளன் ஆகிய தோழர்கள் கலந்து கொண்டனர். பேச்சுவார்த்தையில் ஒரு சுமுகமான சூழல் எட்டவில்லை. நாம் நமது தரப்பு நியாயத்தை கூறி வெளியேறினோம். இச்சூழ்நிலையில் சென்னை மாநகர காவல்துறை இணை இயக்குனர் அவர்கள் மின்துறை அமைச்சரிடம் விபரங்களை கூறிய பின்பு இரவு 8.00 மணியளவில் மின்துறை அமைச்சர் வாரிய அலுவலகத்திற்கு வந்து அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தி சென்றார்.

நாம் நமது போரட்டத்தின் தன்மையை வாரியத்தில் உணர்த்த, நமது தோழர்களை தொடர்பு கொண்டு காலத்தே புறப்பட்டு 22.12.2016 காலை 7 மணிக்கு முன்பாக வரக்கூறினோம். காவல்துறை ஒரு பக்கம் பேச்சுவார்த்தைக்கு உதவினாலும் மறுபக்கம் பந்தல் போடுவதற்கு தடைவிதித்து கொண்டு இருந்தனர். நேரம் அதிகரிக்க வந்திருந்த தோழர்கள் நாம் ஏற்கனவே கூறியபடி சென்னை/ வடக்கு, சென்னை/தெற்கு,வேலூர், விழுப்புரம் மண்டலங்கள் அண்ணாசலை நுழைவு வாயிலுள்ள முன்பகுதியிலும், இதர மண்டலங்கள் பின்புறமுள்ள நுழைவு வாயிலுள்ள பகுதியிலும் அணிவகுக்க ஆரம்பித்தார்கள்.

தோழர்களின் வருகையடுத்து சுமார் 7000-க்கும் மேற்பட்டோர் இரு நுழைவுவாயிற்களிலும் கூட்டு முறையீடு செய்ய கோஷங்களை எழுப்பினார்கள். முன்பகுதிக்கு தோழர்

எஸ்.எஸ்.சுப்பிரமணியன், மாநிலத்தலைவர் தலைமையேற்க சி.ஐ.டி.யூ.வின் தமிழ் மாநிலத்தலைவர் தோழர் அ.சவுந்தரராசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் துவக்கி வைத்தார். அதன் பின் பின்புற நுழைவுவாயிலில் தோழர் எஸ்.இராஜேந்திரன், பொதுச்செயலாளர் தலைமையேற்க தோழர் அ.சவுந்தரராசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், இங்கு துவக்கவுரையாற்றினர். மேலும் CITU வின் உதவி பொதுச்செயலாளர் தோழர் ஆர். கருமலையான் கண்டன உரையாற்றினர். இவ்விரு நிகழ்ச்சியிலும் மாநில நிர்வாகிகள் கலந்துகொண்டு கண்டன உரை நிகழ்த்தி வந்தனர்.

இதற்கிடையில் பிற்பகல் சுமார் 3.00 மணியளவில் வாரியத்தோடு பேச்சுவார்த்தை நடத்த நம்மை அழைத்தனர்.

பேச்சுவார்த்தையில் நமது தரப்பில் தோழர்கள் எஸ்.எஸ்.சுப்பிரமணியன்/தலைவர் எஸ். இராஜேந்திரன்/பொதுச்செயலாளர்,எம்.வெங்கடேசன்/பொருளாளர் மற்றும் வி.இளங்கோ, டி.ஜெயசங்கர், கே. அருள்செல்வன், எம்.தனலட்சமி, ஆர்.குருவேல், எம்.பாலசுப்பிரமணியம், ஏ.பழனி, ஆர்.ரவிக்குமார், ஆகிய தோழர்கள் கலந்து கொண்டனர். பேச்சு வார்த்தையில் நமது தரப்பு நியாயங்களை நமது தலைவர் தோழர் எஸ்.எஸ்.சுப்பிரமணியன் ஆணித்தரமான ஆதாரங்களோடு முன் வைத்து பேசினர்.

பேச்சுவார்த்தை நிறைவுக்குபின் பின்புறமுள்ள நுழைவு வாயில் CITUவின் மாநிலப் பொதுச் செயலாளர். தோழர் G. சுகுமாறன் அவர்கள் நிறைவுரைக்கு பின் மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர். S. இராஜேந்திரன் பேச்சு வார்த்தை விபரங்களை தெரிவித்து நமது இயக்கத்தை நிறைவு செய்தார்.

அதே போல முன்புறம் உள்ள நுழைவு வாயிலில் தோழர் R. கருமலையான் உதவி பொதுச்செயலாளர் நிறைவுறை பின் மத்திய அமைப்பின் தலைவர் தோழர் S.S. சுப்ரமணியன் அவர்கள் பேச்சுவார்த்தை விபரங்களை தெரிவித்து நமது இயக்கத்தை நிறைவு செய்தார்.

ஊழியர்களின் உற்சாக முழங்களோடு தோழர்கள் களைந்து சென்றனர்.

# பேச்சுவார்த்தை விபரம்

**நமது கோரிக்கை**

1. மின்வாரிய ஊழியர்களுக்கு 1.12.2015 முதல் ஊதிய உயர்வு வழங்கியிருக்க வேண்டும், ஆனால் வாரியம் கமிட்டி அமைப்பதும், பேச்சு வார்த்தை துவங்குவது என்பன போன்றவற்றை செய்து காலதாமதம் செய்து வருகிறது. பேச்சு வார்த்தையை தொடர்ச்சியாக நடத்தி ஒப்பந்தம் கண்டு, ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும்.

**வாரியத்தரப்பு**

தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை தொடர்ச்சியாக நடத்தப்படும்.

**நமது கோரிக்கை**

2. மின்வாரியத்தில் பணியாற்றும் வணிக உதவியாளர் - கம்பியாளர் ஊழியர்களுக்கு சமச்சீர் பதவி உயர்வு இல்லாத காரணத்தால் இரண்டாண்டு பணி முடித்த வணிக உதவியாளருக்கு பதவி உயர்வும், 13 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய கம்பியாளர்களுக்கு பதவி உயர்வு இல்லாத அவல நிலை நிலவி வருவதை மாற்றும் வகையில் வணிக உதவியாளர் - கம்பியாளருக்கு சமச்சீராக

பதவி உயர்வு கிடைக்கும் வகையில் பேச்சு வார்த்தை நடத்தி இறுதி நிலை எட்டிய பிறகும், அதன் மீது தொடர்ச்சியான நடவடிக்கை எடுத்து கம்பியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும் வகையில் சூப்பர் நியூமரி மின்பாதை ஆய்வாளர் (SNLI) பதவிகளை காலதாமதமின்றி அனுமதித்திட வேண்டும்.

**வாரியத்தரப்பு**

2017 - ஜனவரியில் நடக்கும் வாரிய கூட்டத்தில் இது சம்பந்தமாக முடிவு செய்யப்படும்.

**நமது கோரிக்கை**

3. 10 ஆண்டுகளுக்கு மேலாக ஒப்பந்த தொழிலாளியாக பணியாற்றி, அதன் பின்னர் மஸ்துாராக பணி நியமனம் செய்யப்பட்டு,மஸ்துாராக 5 ஆண்டுகாலம் பணியாற்றி, அதன் பின்னர் கள உதவியாளர் பதவியில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அடுத்த பதவி உயர்வு வாய்ப்பு வரும்போது மஸ்துார் பணிக்காலத்தை பதவி உயர்வுக்கு எடுக்க வேண்டாம் என்ற தவறான உத்தரவை பிறப்பித்து அந்த உத்தரவை ரத்து செய்து, 10 ஆண்டுகளுக்கும் மேலாக களஅனுபவம் பெற்ற மஸ்துார்களின் பணிக்காலத்தை முதன்மை பட்டியலுக்கு கணக்கில் கொண்டு, பதவி உயர்வு வழங்கிட வேண்டும். அது மட்டுமல்லாமல் களப்பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதை நிறுத்தி வைக்க வேண்டும் என்ற நீதிமன்ற தற்காலிக தடையை அகற்றி பதவி உயர்வு உடனடியாக வழங்கிட வேண்டும். சூப்பர் நியூமரி மின்பாதை ஆய்வாளர் பதவிகளை காலதாமதமின்றி அனுமதித்திட வேண்டும்.

**வாரியத்தரப்பு**

இரு தினங்களுக்குள் முடிவு எடுக்கப்படும்.

**நமது கோரிக்கை**

4. மின்வாரியத்தில் 20,000-க்கும் மேற்பட்ட களஉதவியாளர் பதவிகள் காலியாக உள்ளதை மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளிகளை அடையாளங்கண்டு, சமவேலைக்கு சமஊதியம் அளித்து, பின்னர் பணி நிரந்தரம் செய்து காலிப்பணி இடங்களை நிரப்பிட வேண்டும். அதன்பின் வாரியத்தில் காலிப்பணி இடங்களாக உள்ள களஉதவியாளர் பதவிகளை தொழிற்கல்வி பயின்றவர்களைக் கொண்டு (ஐ.டி.ஐ) நிரப்பிட வாரியம் எடுத்த முயற்சியில் அப்பரண்டீஸ்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதையும் கணக்கில் கொண்டு நீதிமன்ற தீர்ப்பை முடிவுக்கு கொண்டு வந்து, தொழிற்கல்வி ஐ.டி.ஐ பயின்றவர்களைக் கொண்டு களஉதவியாளர் பதவிகளை நிரப்பிட வேண்டும்.

**வாரியத்தரப்பு**

இக் கோரிக்கை பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

**நமது கோரிக்கை**

5. மின் வாரியத்தில் புதியதாக துவங்கப்பட்ட அலுவலகங்களுக்கு பகுதிநேர ஊழியர் பதவிகளை அனுமதித்து நிரப்பிட வேண்டும் என்ற மத்திய அமைப்பின் வேண்டுகோளின்படி திட்டங்களில் கருத்துருக்களைப் பெற்று 1046 பதவிகள் அனுமதிக்க வேண்டும் என்ற நிலை வந்த பின்னரும், வீணாக காலதாமதம் செய்யும் வகையில், விவரங்கள் கேட்பதை கைவிட்டு இறுதிப்படுத்தப்பட்ட 1046 பதவிகளை அனுமதித்து உடன் நிரப்பிட வேண்டும்.

**வாரியத்தரப்பு**

இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு 31.01.2017-க்குள் உத்தரவு வழங்கப்படும்.

**நமது கோரிக்கை**

6. மின் வாரியத்தின் வருவாயை உறுதிப்படுத்தும் கணக்கீட்டுப் பிரிவில் 2500-க்கும் மேற்பட்ட கணக்கீட்டு ஆய்வாளர் பதவிகளும் 1000-க்கும் மேற்பட்ட வருவாய் மேற்பார்வையாளர் பதவிகளை நிரப்பிடும் வகையில் வருவாய் மேற்பார்வையாளர் பதவி உயர்வுக்கும், மதிப்பீட்டு ஆய்வாளர் பதவி உயர்வுக்கும் நிர்ணயிக்கப்பட்ட பணி அனுபவ காலத்திற்கு விதிவிலக்கு அளித்து பதவி உயர்வு அளித்து மேற்கூறிய பதவிகளை நிரப்பிட வேண்டும்.

**வாரியத்தரப்பு**

வாரியக் கூட்டத்திற்கு கொண்டு செல்லப்பட்டு ஜனவரி 31.01.2017-க்குள் முடிக்கப்படும்.

**நமது கோரிக்கை**

7. பதிவறை எழுத்தர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்கும் வகையில் பதிவறை உதவியாளர் பதவிகளை அனுமதித்து, அதற்கான பெயர் பட்டியல் கேட்டு பெறப்பட்ட பின்னரும் காலதாமதம் செய்யும் போக்கினை கைவிட்டு 47 பதிவறை உதவியாளர் பதவி உயர்வை உடனடியாக வழங்கிட வேண்டும்.

**வாரியத்தரப்பு**

உத்தரவு இன்று வழங்கப்படும்.

**நமது கோரிக்கை**

8. 500-க்கும் மேற்பட்ட உதவிசெயற்பொறியாளர் பதவிகள் பலமாதங்களாக காலிப்பணி இடங்களாக இருந்த போதிலும், அப்பதவிகளுக்கு தேவையான பொறிஞர்கள் பதவி உயர்வுக்கு காத்திருந்த போதிலும், பதவி உயர்வு அளித்து பதவிகளை நிரப்ப வீணான காலதாமதப் போக்கினை கைவிட்டு காலியாக உள்ள உதவி செயற்பொறியாளர் பதவிகளை உடனடியாக நிரப்பிட வேண்டும்.

**வாரியத்தரப்பு**

15.01.2017-ம் தேதிக்கு முன்பு பேனல் பட்டியல் வெளியிடப்படும்.

**நமது கோரிக்கை**

9. 80,000-க்கும் மேற்பட்ட பணி நிலைமைகளை பரிசீலித்து வழிகாட்டுதல் வழங்க வேண்டிய நிர்வாகப் பிரிவு, முறையான செயல்பாடின்றி கிடக்கின்றது. நிர்வாகப்பிரிவு வாரிய விதிகளுக்கு உட்பட்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பது கிடையாது. தனிநபர் விண்ணப்பம், சங்கம் கொடுக்கின்ற கடிதங்கள் மீது தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு அவர்கள் குறிப்பு எழுதி பிரிவுக்கு அனுப்பாமல் கொடுக்கும் விண்ணப்பங்களும், தொழிற்சங்க கடிதங்களும் சம்மந்தப்பட்ட பிரிவுக்கு செல்வது கிடையாது. பிரிவுக்கு சென்றாலும் அதன் மீது நடவடிக்கை ஏதும் இல்லாத கேவலமான நிலைமை நிர்வாகப் பிரிவில் கையாளப்படுகிறது. இதை முற்றிலும் மாற்றிஅமைத்து, கொடுக்கும் கடிதங்கள் விண்ணப்பங்கள் மீது நிர்வாகப்பிரிவு நடவடிக்கை எடுத்து விதிகளின் அடிப்படையில் எது சாத்தியமோ அதை செய்திட வேண்டும்.

**வாரியத்தரப்பு**

தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு அனைத்து தபால்களை, எவ்வித புகாருக்கும் இடம் கொடுக்காமல் ஏற்கனவே உள்ள வாரிய உத்திரவு மற்றும் வழிகாட்டுதல் அடிப்படையில் செயல்பட கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

## பேச்சுவார்த்தை குறிப்பு நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

தோழர்களே!

இதுவரை ஒப்பந்த தொழிலாளர்களே இல்லை எனச்சொன்ன வாரியம் இப்பொழுது நமது போராட்டத்திற்கு பின்பு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியுள்ளது. நமது முயற்சிக்கு கிடைத்த வெற்றி. அதே போல ஆவண எழுத்தர் பதவி உயர்வு, பகுதிநேர ஊழியர் பணியிடம் நிரப்புதல் களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு, கணக்கீட்டு ஊழியர்களின் பதவி உயர்வு, மஸ்துார் பணிக்காலம் பதவி உயர்வுக்கு கணக்கில் எடுப்பது, உதவிப்பொறியாளர் பதவி உயர்வு போன்றவற்றில் குறுகியகால அவகாசத்தோடு முடிப்போம். என பேச்சுவார்த்தையில் தெரிவித்து பேச்சுவார்த்தை குறிப்பையும் நமக்கு வழங்கியுள்ளனர். இது நமது போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி என்பது நமது அணிகளுக்கு சொல்ல வேண்டும்.

நமது மின் ஊழியர் மத்திய அமைப்பின் போராட்ட வரலாற்றில் இந்த போராட்டம் சி.ஐ.டி.யு.வின் மணி மகுடத்தில்மேலும் ஒரு வைரக்கல்லாக நம்முடைய அத்துணை தோழர்களின் கடுமையான முயற்சியில் பதிய வைத்துள்ளோம். ஒப்பந்த ஊழியர்களையும் - நிரந்தர ஊழியர்களையும்திரட்டி (7000 மேற்பட்டவர்களை) நாம் நடத்திய இயக்கம், சமீபத்தில் ஓரிசாவில் நடந்த சி.ஐ.டி.யு-வின் அகில இந்திய மாநாட்டு முடிவை நமது அரங்கில் வெற்றிகரமாக நடத்தியுள்ளோம் என்பதை பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

இந்த போராட்டம்,இதன் வெற்றியை நாம் சுவைக்க வேண்டுமெனில், அனைத்து ஊழியர்களிடமும் நமது கோரிக்கைகள், போரரட்ட ஏற்பாடுகள், போராட்டம் நடந்தவிதம் என அனைத்து அம்சங்களையம் விளக்க வேண்டும். அதற்கான சிறப்புப் பேரவைகள் நடத்த கிளைகள் ஏற்பாடு செய்ய வேண்டும். கலந்து கொள்ளும் மாநில நிர்வாகிகள் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நமது ஸ்தாபன பலத்தை உயர்த்த இந்த தருணத்தில் ஊழியர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள எழுச்சியை கணக்கில் கொண்டு 2016 உறுப்பினர் எண்ணிக்கையை கிளைகள் பூர்த்தி செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

தோழர்களே, இந்த போராட்டத்திற்கு உழைத்த மாநில நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், கோட்டச் செயலாளர்கள் கிளைகளின் நிர்வாகிகள், இந்த இயக்கத்தில் கலந்து கொண்ட அத்துணை தோழர்களுக்கும் மீண்டும் ஒருமுறை மாநில மையத்தின் சார்பாக புரட்சி கலந்த வாழ்த்துக்களையும், நன்றிகளையும் உரித்தாக்குகிறோம்.

வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள



**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்

**குறிப்பு: போனஸ் நன்கொடை விபரத்தை மேற்பார்வை பொறியாளர் அலுவலத்திலிருந்து சென்னைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநில மையத்திற்கு தகவல் தெரிவிக்கவும்.**

# தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு (சிஐடியு) சிறப்பு பேரவை

**சென்னை வடக்கு மண்டலம்**

| | | |
|---|---|---|
| 1. | வடசென்னை | S.S. சுப்பிரமணியன் |
| 2. | மத்திய சென்னை | M. வெங்கடேசன் |
| 3. | மேற்கு சென்னை | S. இராஜேந்திரன் |

**சென்னை தெற்கு மண்டலம்**

| | | |
|---|---|---|
| 4. | தென்சென்னை | K. அருள்செல்வன் |
| 5. | செங்கல்பட்டு | M.தயாளன், M. சாலட் |
| 6. | காஞ்சிபுரம் | M. தனலட்சுமி |

**வேலூர் மண்டலம்**

| | | |
|---|---|---|
| 7. | வேலூர் | T. ஜெய்சங்கர் |
| 8. | திருப்பத்தூர் | A. பழனி |
| 9. | தர்மபுரி | V. இளங்கோ |
| 10. | கிருஷ்ணகிரி | சி. ஜோதிமணி |

**விழுப்புரம் மண்டலம்**

| | | |
|---|---|---|
| 11. | விழுப்புரம் | டி. பழனிவேல் |
| 12. | கடலூர் | K. அருள்செல்வன் |
| 13. | திருவண்ணாமலை | ஆர். ரவிக்குமார் |
| 14. | கள்ளக்குறிச்சி | டி. ஶ்ரீதர் |

**திருச்சி மண்டலம்**

| | | |
|---|---|---|
| 15. | பெரம்பலூர் | G. ராமகிருஷ்ணன் |
| 16. | திருச்சி/மாநகர் | K. சிவராஜ் |
| 17. | கரூர் | B.K. சிவக்குமார் |
| 18. | புதுக்கோட்டை | R. உமாநாத் |
| 19. | தஞ்சாவூர் | S. இராஜேந்திரன் |
| 20. | நாகப்பட்டிணம் | K. அம்பிகாபதி |
| 21. | திருவாரூர் | T. ஜெய்சங்கர் |

**மதுரை மண்டலம்**

| | | |
|---|---|---|
| 22. | மதுரை | M. பீர்முகமதுஷா |
| 23. | மதுரை மாநகர் | |
| 24. | தேனி | M. பன்னீர்செல்வம் |
| 25. | ராமநாதபுரம் | S. இராஜேந்திரன் |
| 26. | சிவகங்கை | வை. பாலசுப்பிரமணியன் |
| 27. | திண்டுக்கல் | டி. பழனிவேல் |

| | | |
|---|---|---|
| **திருநெல்வேலி மண்டலம்** | | |
| 28. | விருதுநகர் | S. ராமசந்திரன் |
| 29. | திருநெல்வேலி | R. குருவேல் |
| 30. | தூத்துக்குடி | K. ஜெயசீலன் |
| 31. | கன்னியாகுமரி | பின்னர் அறிவிக்கப்படும் |
| **கோவை மண்டலம்** | | |
| 32. | நீலகிரி | வி. மதுசூதனன் |
| 33. | கோவைதெற்கு | S.S. சுப்பிரமணியன் |
| 34. | கோவைவடக்கு | S.S. சுப்பிரமணியன் |
| 35. | கோவை மாநகர் | S.S. சுப்பிரமணியன் |
| 36. | உடுமலைபேட்டை | வி. மதுசூதனன் |
| 37. | திருப்பூர் | V. இளங்கோ |
| **ஈரோடு மண்டலம்** | | |
| 38. | சேலம் | K. காங்கேயன் |
| 39. | மேட்டூர் | S. அப்பாதுரை |
| 40. | ஈரோடு | M. கோவிந்தராஜ் |
| 41. | கோபி | S. கோபால கிருஷ்ணன் |
| 42. | நாமக்கல் | S. ரங்கராஜன் |
| **அனல் மின்நிலையங்கள்** | | |
| 43. | வடசென்னை அனல் | R. ரவிக்குமார் |
| 44. | எண்ணூர் | T. ஜெய்சங்கர் |
| 45. | மேட்டூர் அனல் | S. அப்பாதுரை |
| 46. | தூத்துக்குடி அனல் | வை. பால சுப்பிரமணியன் |
| **புனல் மின்நிலையங்கள்** | | |
| 47. | ஈரோடுஉற்பத்தி | சி. ஜோதிமணி |
| 48. | காடம்பாறை | S. கோபால கிருஷ்ணன் |
| 49. | குந்தா உற்பத்தி | B.K. சிவக்குமார் |
| 50. | நெல்லைஉற்பத்தி | S. வண்ணமுத்து |
| 51. | காற்றாலைபண்ணை | S. வண்ணமுத்து |
| 52. | பொதுகட்டுமானம் / சென்னை | M. வெங்கடேசன் |
| 53. | பொது கட்டுமானம்/மதுரை | M. பீர்முகமது ஷா |

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


26/12/2016

## 22.12.2016 அன்று மின்வாரிய தலைமையகம் முன்பு நடைபெற்ற கூட்டுமுறையீடு - காத்திருப்பு போராட்டம் பேச்சுவார்த்தை விவரக்குறிப்பு (மினிட்ஸ்)

TANGEDCO

Sub: Demands raised by CITU – Reg.

Ref: Representation by CITU dt.17.12.2016 .

-----

CITU raised various demands on 22.12.2016. A detailed discussion was held with the Office bearers of CITU. MD/TANTRANSCO, Director/Distribution, Director/Transmission, Director/Finance, Secretary, Chief Engineer/Personnel, Deputy Chief Engineer participated in the discussion.

2. After detailed deliberations the following decisions are arrived:

| Sl. No. | Demands | Decision arrived |
|---|---|---|
| 1. | Wage Revision | Periodical meetings will be conducted with Unions. |
| 2. | Double Channel | It has been decided to place the matter before the Board to be held in Jan. 2017. |
| 3. | Condition of service regulations to be implemented for Mazdoor | Within 2 days decision will be taken. |
| 4. | Absorption of Contract Labourers | The issue will be pursued and decision will be taken |
| 5. | Sanction of 1046 part time workers | The issue will be pursued and orders will be issued before 31.1.2017. |
| 6. | Relaxation of experience period for the post of IA/RS | The matter to be placed before the Board in Jan. 2017 |

| | | |
|---|---|---|
| 7. | Promotion from RC to RA | To be issued tomorrow. |
| 8. | Panel to be prepared from AE/Electrical to AEE/Electrical | Panel will be drawn before 15.1.2017. |
| 9. | Attending to tapal given to various Unions | CE/Personnel has been requested to attend all tapals regularly without giving room for complaints as per the existing order/directives. |

22/12/16
MD/ TANTRANSCO

22/12/2016
DIR / FINANCE

22/12/16
DIRECTOR/ Trans

22/12/16
DIRECTOR / DISTRIBUTION

22/12
Secy/ TANSEDCO

22/12/16
CE/Per

K. Sundarandharan
22/12/16
CFC/LR.

President/COTEE

22/12/16
G.S / Cotee

M. Venkatesan
Treasurer/Cotee